தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை - 600 025.

சுற்றறிக்கை எண்: DOTE/194/2025-RO2 நாள் 23-06-2025

**பொருள்:** அரசு வணிகவியல் தேர்வுகள் - தட்டச்சு தேர்வுகள் தட்டச்சு இயந்திரங்கள் மூலமும் நடைபெற இறுதியான கால நீட்டிப்பு வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:** சுற்றறிக்கை எண் : DOTE/194/2025-RO2 நாள் 10.03.2025, 18.04.2025 மற்றும் 26.04.2025

***

பார்வையில் காணும் சுற்றறிக்கைகளில் தட்டச்சு தேர்வு நடைமுறை மாற்றங்கள் குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. அதில் ஏற்கனவே தட்டச்சு தேர்வுகள் தட்டச்சு இயந்திரங்கள் மூலமும் 2026 வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இப்பொருள் தொடர்பாக தட்டச்சு பயிலக உரிமையாளர்கள் தங்களது வாழ்வாதாரம் குறித்து அரசிடம் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், அரசின் அறிவுறுத்தலின்படி இறுதியான கால நீட்டிப்பு வழங்கி, தட்டச்சு தேர்வுகள் தட்டச்சு இயந்திரங்கள் மூலமும் 2027 வரை நடைபெறும் எனவும் 2028 முதல் கணினி மூலம் மட்டுமே அனைத்து வணிகவியல் தேர்வுகளும் நடைபெறும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தட்டச்சு ஆசிரியர்கள் கணினி மூலம் பயிற்சி வழங்க ஏதுவாக தங்களை மேம்படுத்திக்கொள்ள வலைதளங்களில் பெருமளவில் காணொளிப்பதிவுகள் உள்ளன. இருப்பினும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் பயிற்சி காணொளிப்பதிவுகள் தயாரிக்கப்பட்டு இயக்கக இணையதளத்தில் வெளியிடப்படும்.

மாணாக்கர்களுக்கு தற்போதைய தொழில்நுட்பத்தில் பாடங்கள் நடத்த வழிவகை செய்ய வேண்டியது அரசின் கடமை மட்டுமல்ல, ஆசிரியர்களின் கடமையும் கூட என்பதை உணர்ந்து அரசால் வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தை பயன்படுத்தி தங்களை மேம்படுத்திக்கொண்டு, மாணாக்கர்களுக்கு நடைமுறையிலுள்ள தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

புதிதாக பயிற்சியினை துவங்கும் மாணாக்கர்கள் மற்றும் பள்ளிப் பருவ மாணாக்கர்களின் பெற்றோர்கள் கணினி மூலம் தட்டச்சு பயிற்சி பெறுவது குறித்து விவரங்களை அறிந்து செயல்படவும், குறிப்பாக தமிழ் தட்டச்சு பயிற்சியை அரசால் அங்கீகரிக்கப்பட்ட குறைந்த விசைகள் கொண்ட தமிழ்99 விசைப்பலகை மூலம் பயிற்சி மேற்கொள்ளவும், வணிகவியல் பள்ளி உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் இயன்ற வரை விரைவாக தங்களையும் தங்கள் பயிலகத்தையும் மேம்படுத்திக்கொண்டு மேற்கூறியவற்றை நடைமுறைபடுத்தவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் தட்டச்சு தேர்வுகள் நிறுத்தப்படுவது குறித்து எவ்வித அறிவிப்பும் இவ்வியக்ககத்தால் அறிவிக்கப்படவில்லை எனவும், அத்தேர்வுகள் நடைபெறும் முறை மட்டுமே மாற்றப்பட்டு கணினி மூலமாக நடைபெறும் எனவும், புதிய COA

தேர்வும் கணினி வழி தட்டச்சு தேர்வும் இரு வேறு தேர்வுகள் எனவும், பொது வெளிகளில் உலவும் தவறான செய்திகளை நம்ப வேண்டாம் எனவும், பல முறை பதிலளிக்கப்பட்டும் ஒரே பொருள் குறித்து வெவ்வேறு விதமாக கடிதங்கள் மற்றும் மனுக்கள் அரசுக்கு அனுப்பப்படுவதால் மாணாக்கர்களுக்கு தேவையான சேவைகள் மேற்கொள்ள இடையூறாக உள்ளது எனவும், வணிகவியல் மற்றும் COA தேர்வுகள் குறித்து ஒவ்வொறு நிலைகளிலும் இவ்வியக்கக இணையதளத்தில் அறிவிக்கைகள் வெளியிடப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- **J.INNOCENT DIVYA**
தேர்வு வாரியத் தலைவர்

Digitally signed by
RAMARATHNAM RAMASWAMY
Date: 23-06-2025 10:47:20